1981 மார்ச் 3]

கோபிநகர் மன்ற மேல்நிலைப்பள்ளி

*வினா எண் 344—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபி நகர் மன்ற மேல் நிலைப்பள்ளிக்கு விளையாடும் இடம் அமைப்பதற்கும், போதிய வகுப்பறைகள் கட்டுவதற்கும் அரசு முயற்சிகள் எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் பணி எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : இம்மேல்நிலைப் பள்ளியிலுள்ள 45 செண்ட் காலியிடம் தற்போது விளையாடுமிடமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது, கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு வேண்டிய மதிப்பீடு தயார் செய்து தக்க மேல் நடவடிக்கைகளை நகராட்சி ஆணையர் எடுத்து வருகிறார்.

திரு கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படுவதாகச் சொன்னார்கள். எத்தனை வகுப்பறைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவிப்பதோடு, அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன், அதைப் போல விளையாடும் இடம் அமைக்க 45 செண்ட் இடம் ஒதுக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு மேல் நிலைப் பள்ளிக்கு குறைந்தது 3 ஏக்கர் நிலப்பரப்பு இருந்தால்தான் மாணவர்கள் நல்ல முறையில் விளையாட வசதியாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா? அப்படியானால் தேவையான இடத்தை வாங்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அந்த மேல்நிலைப் பள்ளியிலே கூடுதல் கட்டிடம் கட்டுவதற்காக என்று 1,17,000 ரூபாயும், அதே மேல்நிலைப் பள்ளிக்காக செய்முறைக் கூடமும், வகுப்பறைகளும் கட்டுவதற்காக 1,82,000 ரூபாயும் ஆகும் என்று நிர்ணயிக்கப்பட்டு, அதற்கான மதிப்பீட்டை ஆய்வு செய்ய பொதுப்பணித் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்பதையும், அதேபோல விளையாடும் இடத்திற்காக 65 செண்ட் நிலம் தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

திரு. கு. அ. செங்கோட்டையன் : 65 சென்ட் நிலம் விளை யாடுவதற்காக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மேல்நிலைப் பள்ளியில் 1,200 மாணவர் கள் படிப்பதால் அதை விரிவுபடுத்தும் திட்டம் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் சொன்ன திட்டங் களே விரிவுப்படுத்துகிற திட்டங்கள்தான்.

கரூர் மில்ஸ் செலுத்த வேண்டிய வரிபாக்கி.

*வினா எண் 345—திரு. எம். சின்னசாமி ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் கரூர் தாலூக்கா தாந்தோணி பேரூராட்சிக்கு கரூர் மில்ஸ் நிர்வாகம் வரி செலுத்தாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொகை உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ரூ. 1,33,113·60

திரு. எம். சின்னசாமி : இந்தத் தொகை அதிகமாக இருப்ப தால் அந்தப் பேரூராட்சியில் நடைபெறுகிற திட்டங்கள் அதனால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அதை விரைந்து வசூலிப்ப தற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; தாந்தோணி பேரூ ராட்சிக்கு கரூர் மில்ஸ் நிறுவனத்தார் செலுத்த வேண்டியது ரூ. 1,33,113·60, நிலுவையில் இருக்கிறது. 1975—76ல் போடப்பட்ட வரி அதிகம் என்று அவர்கள் கோர்ட் டுக்கு சென்று வழக்கு தாக்கல் செய்து அது வழக்கு மன்றத்தில் இருக்கிற காரணத்தால் கடந்த 1980—81 வரை இந்த ரூ. 1,33,113·60 நிலுவையில் இருக்கிறது. தகுந்த நடவடிக்கை கள் எடுக்கப்பட்டு வருகின்றன.